# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2010
ஐப்பசி 11
துல்ஹஃதா 6
ஞாயிறு (28-10-1979)
நிறுவியது 1947
புத்தகம் 33
இதழ் 42
விலை சதம் 75


# "போராட்டம் ஒன்றின் மூலமே விடுதலையை வென்றெடுக்க முடியும்"

## ஐ. நா. தின விழாவில் அமிர்தலிங்கம் உரை!

''ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும், இறைமையையும் மீட்டுக் கொடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை இதுவரை எந்த ஒரு அமைப்பையும் ஏற்படுத்தவில்லை. இந்த நிலையில் உலகில் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் ஒவ்வொன்றும் தமது விடுதலையை போராட்டத்தின் மூலமே நிலைநாட்டி வருகின்றன. ஒவ்வொரு தேசிய இனத்தினதும் சுதந்திரத்துக்கும் இறைமைக்கும் உத்தரவாதம் கிடைக்காதவரை, போரில்லாத உலகத்தை நாம் காணமுடியாது. இலங்கையில் தமிழ் ஈழ தேசிய இனத்தின் சுதந்திரத்துக்காகப் போராடும் நாம் காந்திய வழியையே தேர்ந்தெடுத்திருக்கிறோம். உலகில் வேறுபல இனங்கள், தேசங்கள்பலாத்காரத்தின் மூலமே தமது விடுதலைக்குப்போராடி வருகின்றன, எந்த வழியென்றாலும் சரி— போராட்டமின்றி எந்த ஒரு தேசிய இனமும் இன்றைய உலகில் தனது சுத்ந்திரத்தை மீட்டுவிட முடியாது!'

—இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் 24-10.79 மாலை நடைபெற்ற ஐக்கியநாடுகள் தினவிழாவில் பேசிய எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பா,உ, அவர்கள் குறிப்பிட்டார்:

யாழ் மாநகர சபையினால் ஏற்பாடு செய்திருந்த இவ் விழாவுக்கு முதல்வர் திரு. இராசாவிசுவநாதன் தலைமை வகித்தார். திரு.அமிர்தலிங்கம் மேலும் தமது பேச்சில் கூறியதாவது:

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் ஒவ்வொரு தேசிய இனத்துக்கும்சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் அந்தச் சுயநிர்ணய உரிமை மறுக்கப்படும் தேசியஇனங்கள் அதற்காகப் போராடியே தீரவேண்டிய சூழ்நிலை இன்றைய உலகில் இருந்து கொண்டிருக்கிறது. உரிமை மறுக்கப்படும் தேசியஇனங்களுக்கு கைகொடுத்து உதவக்கூடிய எந்த ஒரு அமைப்பையும் ஐ.நா. சபை இன்னும் உருவாக்கவில்லை. உலக விடுதலை இயக்கங்களில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஒன்றுக்குத்தான் ஐ. நா, சபையில் இதுவரை இடம் கிடைத்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் தமது சுதந்திரத்தை நிலைநாட்ட பலாத்காரப் போராட்டங்களிலே ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன, றொடீசியாவில் ஒடுக்கப்படும் கறுப்பு இன

—8-ம் பக்கம் பார்க்க

'உங்களின்

## மூளைக்கு யாரோ விஷம் ஏற்றியுள்ளனர்''

—பாட்லட்

''கமிஷன்முன் இவ்வாறு பேசவேண்டாம்''

—சன்சோனி

செய்தி உள்ளே

# தகுதிவாய்ந்த அதிகாரி பதவியிலிருந்து யோகேந்திரா துரைசாமியை நீக்கும்படி பாராளுமன்றத்தில் பண்டிதர் பிரேரணை

யாழ் மாவட்ட தகுதிவாய்ந்த அதிகாரி பதவியிலிருந்து திரு. யோகேந்திரா துரைசுவாமியை நீக்கக் கோரி பாராளுமன்றத்தில் காவலூர் பா.உ. பண்டிதர் இரத்தினம் நவம்பர் 9ம் திகதி பிரேரணையொன்றைக் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்— பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் 55/79ம் இலக்கப்பிரேரணையாக இடம் பெற்றுள்ளது பிரேரணையின் வாசகம் வருமாறு,—

திரு. கா.பொ. இரத்தினம், தகுதிவாய்ந்த அதிகாரி பதவியிலிருந்து திரு.யோகேந்திரா துரைசுவாமியை நீக்குதல்—பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்செய்தித் தணிக்கைக்குத் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள திரு யோகேந்திரா துரைசுவாமி 1977ஆம் ஆண்டுப்பாராளுமன்றத் தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிட்டு 279 வாக்குகளை மட்டுமே பெற்றுக் கட்டுப்பணத்தை இழந்தவராகையாலும் அனுபவமில்லாதராகையாலும்அரசியல் கண்ணோட்டத்துடன் தமக்குச்சார்பான— பிழையான செய்திகளையும் தம்முடைய

—8ம் பக்கம் பார்க்க

# இன்பத்தின் மரணத்துக்கு யார் பொறுப்பு?

சட்டத்தரணி மாணிக்கவாசகர் அண்டவுட்: தற்போது வடக்கில் அமுலிலுள்ள அவசர காலச் சட்டத்தின் கீழ் பொலீஸ், இராணுவத்தால் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர், இக்கமிஷன் சட்டத்தரணிகளுக்கு உதவி செய்தவர்கள் கைதுசெய்யப்பட்டு மாதக்கணக்கில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். எனவே இக் கமிஷன் முன் எமக்கு சாதகமான சாட்சியங்களைச் சமர்ப்பிப்பது சிரமமாக இருக்கிறது, கடந்த ஆகஸ்ட் 15ம் திகதி 40 டிறக்குகளில் பொலிசார் வவுனியாவில் உள்ள அகதிகள்குடியேற்றப் பகுதிகளுக்கு சென்று அங்கிருந்தவர்களைத் தாக்கித் துன்புறுத்தி வாக்கு மூலம் பெற்றுள்ளனர். சன்சோனி கமிஷன் விசாரணைகளில் சம்பந்தப்பட்டவர்கள் கூடக் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி லெஸ்லி பாட்லட்; கமிஷன் சாட்சியங்களில் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துக்கு உதவி செய்ததற்காகவும் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அவசர காலச்சட்டத்தின் கீழேயே கைதுசெய்யப்பட்டுள்ளனர் இது அவசரகாலச் சட்டத்துக்கே வெட்கமானதாகும்'

—தினபதி (23-10-79)

★ ★

கமிஷனர்; வடக்கில் வன்செயல்கள் நடைபெறவில்லை என்று கூறுகிறீரா?

—8-ம் பக்கம் பார்க்க

## சன்சோனி ஆணைக்குழுமுன் பாட்லட் கேள்வி


சுறுமீன் செட்டை (சிறகு) கடல் அட்டை ஆகியவற்றை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் இலங்கையர்களுடன் தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் வெளிநாட்டு வியாபாரிகள் தொடர்பு கொள்ள விரும்புகிறார்கள்,

தொடர்பு கொள்ளும் முகவரி
மே/பா
27, பவுண்டன் ஹவுஸ் லேன்,
கொழும்பு-10

Foreign Buyer now in Colombo would like to contact Sri Lankan Exporters of SHARKFINS and BECHE-DEMER write to:

C/o 27. FOUNTAIN HOUSE LANE,
COLOMBO—10.




இ. சுப்பிரமணியம்,
யாழ்ப்பாணம்

கே: நீங்கள் தினசரி பிரார்த்தனையின்போது ஆண்டவனிடம் என்ன வேண்டுவீர்கள்?

ப: தமிழீழவிடுதலைவீரர்கள் எங்கிருந்தாலும் என்ன நிலையிலிருந்தாலும் அவர்களுக்கு உடல் வலிவும் உளவலிவும் அளிக்கும்படி பிரார்த்திப்பேன். ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் வேறு எதைச்செய்ய முடியாவிட்டாலும் இதையாவது தினசரி செய்ய வேண்டும்.

கே: கூட்டணியில் குறிப்பிட்ட ஒரு சில பா-உக்களைத்தவிர ஏனையவர்களின் பேச்சு மூச்சையே காணோமே!

ப: அவசரப்படாதீர்கள் சிலரது பேச்சும் நடவடிக்கைகளும் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. வேறு சிலர் வெளியேதெரியாமல் செயற்பட்டு வருகின்றனர். மிகுதிச்சிலரது பேச்சையும் மூச்சையும் அடுத்த தேர்தலின்போதுமேடைகளில் நீங்கள் நிச்சயமாகக் கேட்கலாம்.

* * *

க. இராமசாமி
கொழும்பு.12

கே- தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மந்திரிப்பதவி வழங்க அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளதாமே!

ப; அரசாங்கம்விருப்பம் தெரிவிக்கலாம்—. அதைப் பெரிது படுத்திக்காட்டி ஒரு சில பத்திரிகைகள்மக்களின் மனங்களைக் குழப்பலாம் ஆனால் ஒற்றையாட்சிஇலங்கையில் மந்திரிப்பதவி ஏற்கக் கூட்டணிக்கு தமிழ் மக்கள் அதிகாரம் வழங்கவில்லையே! தமிழ்மக்கள் தமிழீழ விடுதலையொன்றுக்காகப் பாடுபடவேகடந்ததேர்தலில் கூட்டணிக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறார்கள். இந்த அதிகாரத்தை கூட்டணி துஷ்பிரயோகம் செய்யமாட்டாது. இதை கூட்டணியின் செயலதிபர் திரு. அ: அமிர்தலிங்கம் பலதடவை அறுதியிட்டுரைத் திருக்கிறார்.

* * *

செ. கமலாதேவி
சுன்னுகம்,

கே; ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரையில் தமிழ் மக்களுக்குப்பயன் தரும் அம்சங்கள் ஏதாவது இருக்குமா?

ப; ஏன் ஆனை உண்ட விளாங்கனியின் கதி ஆகிவிடுமென்று அஞ்சுகிறீர்களா: எந்த ஆணைக்குழுவும் நமது இனவிடுதலையைவெள்ளித்தட்டில் வைத்துத்தந்துவிடாது—அதற்கு நாமே உழைக்க வேண்டும்;

கே: இலங்கை எங்கே போகிறது?

ப; ஒரு.கட்சிப் பாராளுமன்ற ஆட்சியை நோக்கி நடைபோடுகிறது— சிங்கப்பூர் இலங்கைக்கு இதிலே வழிகாட்டுகிறது,

கே, காட்டு யானைகள் சண்டை பிடிப்பதைப்பார்த்திருக்கிறீர்களா?

ப; பார்க்கவில்லை ஆனால் நாட்டுயானைகள் தமக்குள் மோதுவதைப்பார்த்துரசித்துக்கொண்டிருக்கிறேன்.

க; ரங்கநாதன்
கொழும்பு-6

கே, பத்திரிகையாளர்கள் யாருக்கும் அஞ்சாது உண்மைகளை எழுத வேண்டும் என்று அமைச்சர் ஆனந்ததிஸ்ஸ டீ அல்விஸ் கூறியிருப்பதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப, கையையும் காலையும் கட்டிவைத்துவிட்டு ஓட்டப்பந்தயத்தில் பங்குபெறும்படி சொன்னுல் எப்படியிருக்கும்?

கே, பாகிஸ்தான் ஜனாதிபதி ஷியாவின் ஆட்டம் எத்தனை நாளைக்கு?

ப: அடக்குமுறையையும் இராணுவ பலத்தையும் ஆதாரமாகக் கொண்டு தம்மைக் கட்டியெழுப்பிக் கொண்ட எத்தனையோ சர்வாதிகாரிகள் இருந்த இடமே தெரியாமல் புல்முளைத்துப்போன போது இந்தஷியா எம்மாத்திரம்? மக்கள் பொங்கியெழும் நேரம்வரும்போது அடக்குமுறைகள் தூள்தூளாகும் உரிமைகள் நிலைநாட்டப்படும்.

* * *

கே. காந்திமதி
கொட்டாஞ்சேனை

கே;. பிராந்திய மந்திரி இராசதுரை என்ன செய்கிருர்?

ப: காற்றுள்ள போதே தூற்றிக்கொள்கிருர். அவரது கைகளில் சிக்கியுள்ள இந்துமதத்துக்கு எனது ஆழ்ந்த அனுதாபம்!

கே- வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழர்களுக்கு யூ, என்'பி. அரசாங்கம் மொழியுரிமை வழங்கியிருப்பதாக தேவநாயகமும் தொண்டமானும் கூறிவந்தார்களே இதில்உண்மையுண்டா?

ப: உண்மையில்லை என்பதைத்தான் கொழும்புமாவட்ட நீதிமன்றம் அண்மையில் அளித்த தீர்ப்பு அம்பலப்படுத்தி விட்டதே அரசியலமைப்புப்படி வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள நீதிமன்றங்களின் நீதிநிர்வாக மொழி சிங்களம்தான் என்றும் தமிழுக்குஇடம்இல்லையென்றும் நீதிமன்றம் இப்போது தீர்ப்புக்கூறிவிட்டது, அரசியலமைப்பு த்தெரிவுக்குழுவில் இருந்து அரசியலமைப்பை தயாரித்த தொண்டமானும் தேவநாயகமும் இப்போது என்ன கூறுகிருர்கள்?

★ கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

திருவாளர் குயுக்தியார்

15, மகாத்மாகாந்தி வீதி,
யாழ்ப்பாணம்.

# சிறில்மத்தியுவுடன் சிவா-அமிர்மோதல்

சிறில்மத்தியூ:" கோலாலம்பூரிலிருந்து வெளிவரும் 'ஸ்டார்' என்ற இதழில் ஒரு செய்தி யூலை 1979 ல் வெளியாகியிருந்தது. அடுத்த ஐந்தாண்டுகளில் இலங்கை இரண்டு தேசங்களாகப் பிரியும் என்று எம். பி. ஒருவர் ஹேஷ்யம் கூறுவதாக அச்செய்தி குறிப்பிட்டது; இதை யாழ். பா. உ: யோகேஸ்வரனே கூறியிருந்தார். அவர்கள் வெளிநாடு ஒன்றுக்குத் திருகோணமலையை கொடுக்கப்போவதாக நான் அறிகிறேன்.

சபாநாயகர்; ஒழுங்கு! இச்சபையின் உறுப்பினர் ஒருவருடைய நடத்தை பற்றி எவ்வித குறிப்பும் கூறக்கூடாது.

மத்தியூ: பயங்கரவாதம் ஒரு யுத்தமேயாகும். பிரகடனப்படுத்தப்படாத ஒரு யுத்தம் அது. பைத்தியக்காரர்களும், வெறியர்களும் ஜனநாயகத்துக்கு எதிராக ஏற்படுத்தியுள்ள இந்த யுத்தத்திற்கு ஒரேயொரு மறுமொழி உண்டு. நாய்களும் விசர் நாய்களும் உண்டு.

எம்; சிவா: பெண்நாய்களும் விசர் பிடித்த பெண் நாய்களும்!

மத்தியூ: நாய்களையும் விசர்நாய்களையும் ஒரே மாதிரியாக நடத்த முடியாது. நாய்களை குளிப்பாட்டி உணவூட்டி, தடவி. தட்டிக்கொடுத்து வளர்ப்பதுண்டு, ஆனால் விசர் நாய்களை அழிக்கத்தான் வேண்டும். அப்போதுதான் மனிதகுலம் வாழும்.

எம். சிவா: எம்மையும் வளர்ப்பு நாயாக வைத்திருக்க விரும்புகிறீர்! (குறுக்கீடு)

மத்தியூ: அவசரகாலச் சட்டத்தை அமுல் செய்வதில் இந்த அரசு காலதாமதம் காட்டிவிட்டதாகபலர் கூறுகிருர்கள். அவசரகாலச் சட்டத்தின் பின்னர் அரசியல் கொலைகள் குறைந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதிகள் தவிர, ஏனைய மக்கள் சுதந்திரமாக அச்சமின்றி நடமாடுகிருர்கள்.

அமிர்: இது ஒரு நல்ல பகிடி, அவர்கள் தமது முதுகுகளில் போஸ்டர்களை சுமந்து கொண்டு சுதந்திரமாக நடமாடுகிருர்கள். நீகல் தியேட்டரைச் சேர்ந்த ஒரு காவலாளி எப்படி நடத்தப்பட்டார் என்பதை உமக்குக் கூறியிருந்தேன்.

பிரேமதாசா: பயங்கரவாதிகளில் பெரும்பாலோர் இந்தியாவுக்கு ஓடி விட்டார்கள். அவசரகாலச் சட்டத்தை நீக்கியவுடன் அவர்கள் மீண்டும் இங்கு திரும்பி வந்து விடுவார்கள்.

எம், சிவா; அவசரகாலச் சட்டத்தை நீங்கள் நிரந்தரமாகவைத்துக்கொள்ள முடியாது.

பிரேமதாசா: ஏனைய நாடுகளில் பயங்கரவாதத்தை எப்படிச் சந்திக்கிருர்கள்?

அமிர்: இத்தாலியில் அவசரகாலச் சட்டம் அமுல் நடத்தப்படுகிறதா?

எம்; சிவா. மேற்கு ஜெர்மனியில் அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ளதா?

—பாராளுமன்ற விவாதம்
(ஹன்சார்ட் 4—10—79
தொகுதி 6; இல 7.)

யாழ் மாவட்டத்தில்
செய்தித் தணிக்கை
அவசரகாலச்சட்டம்
**இன்றுடன்**
**103-வது நாள்**

நாவலர் நூற்றுண்டு நினைவு (1)

# (தலைப்பு தணிக்கை)

## நாவலர் பெருமானின் கண்டனம்

நாவலரின் இளமைக் காலத்தில் 'டைக்'கும் மத்திய காலத்தில் ,றச' லும் மாகாண அதிபதிகளாயிருந்து நாவலருக்கு உறுதுணை புரிந்தவர்கள்...... 'றச'லைத் தயாநிதி என்கிருர் நாவலர். 'றசலுக்குப் பின் வந்தவர் துவைனம்...... துவைனத்தின் உத்தியோக நடைமுறையில் நாவலருக்கு அருவருப்பு உண்டாகியிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம்.

பெரியோர்கள் நீதிக்குப் புறம்பானவர்களிடம் எதையும் பெறவிரும்புவதில்லை... நீதிக்குப் புறம்பானவர்களின் உதவி, எடுத்த கருமத்தை மாசுபடுத்தும் என்பதைப் பெரியோர்கள் நன்கு அறிவார்கள்.

நாவலரின் அந்திய காலத்தில் துவைனத்தின் அநீதி மிகப் பிரகாசமாகியது. மழையின்றிய பஞ்சகாலத்திலும் பேதி நோய்க்காலத்திலும் ஏழைகளுக்கு கிடைக்க வேண்டிய அரசாங்க உதவிகளைத் துவைனமும் கீழுள்ளவர்களும் அப்படியே உறிஞ்சிவிட்டார்கள்.

'சமயம் சமயம்,' 'இது நல்ல சமயம்', 'வெகுசனத் துரோகம்' என்ற துண்டுப் புத்தகங்கள் துவைனத்தின்மீது நாவலர் தொடுத்த வச்சிர குலிசங்கள்;

"யாழ்ப்பாணத்துக் கச்சேரி, அநீதி, பொய், கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கிற கலீசு (College), அதற்குத் தலைவர் (Principal) துவைனந்துரை உபாத்தியாயர்கள் 'பாவந் தோன்றிய நாளையிற்றோன்றிய பதகன்' ஆகிய முதலியார் முதலிய சில உத்தியோகத்தர்கள் அவைகள் படிப்பிக்கிற தாலுகாப் பள்ளிக்கூடங்கள் (Taluk Schools) சில தலைமைக் காரர்களுடைய தானங்கள்"

— (இது நல்ல சமயம்-நாவலர்-பா, 5)

—...நாவலர் குடியேற்ற நாட்டு மந்திரி பரியந்தம் துவைனத்தின் ஊழல்களை எடுத்துக் காட்டி வாதித்தார். துவைனம், தம்மீது ஏற்றுங் குற்றங்களைப் பரிகரியாத வழி உத்தியோக இழப்பு ஒன்றோ! உடற்றண்டமும் பெறும் நிலை நேர்ந்தது. துவைனம் செய்வதறியாது திகைத்தார்.

— நூல்: ஆறுமுக நாவலர் (1979 யூலை)
ஆசிரியர்: இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

# “14 பேர் கொல்லப்பட்டனர் என்பதற்காக அப்பாவிகளைத் துன்புறுத்துவது என்ன நீதி?

# குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்துவிட்டு பின் என்ன நடக்கிறதென்பதைப் பாருங்கள்”

## அவசரகால விவாதத்தின்போது ஆளுங்கட்சியினருக்கு சிவா சவால்

‘‘அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்திட நாம் விரும்பவில்லை. பாராளுமன்றத்தை புறக்கணித்து விட்டு, கசெட் மூலம் சட்டங்களை ஆக்கவும், ஆட்களைக் கைது செய்யவும், தடுப்புக்காவலில் வைக்கவும் அவசரகாலச்சட்டம் வழிவகுப்பதுடன் மக்களின் சுதந்திரங்களை முழுமையாக அழித்தொழிக்கிறது’’—இவை ஜனாதிபதி அவர்களின் திட்டவட்டமான வார்த்தைகளாகும், அவசரகாலச் சட்டத்தை நீடிக்கக்கூடாதென்பதற்கு ஜனாதிபதியின் மேற்படி வார்த்தைகளைத்தவிர வேறு காரணம் எதுவுமே வேண்டியதில்லை. எனவே ஜனாதிபதியின் மேற்படி கருத்துக்களையே பக்கபலமாகக்கொண்டு, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பிலே அவசரகாலச்சட்டத்தை நீடிப்பதற்கு நான் எனது எதிர்ப்பையும் ஆட்சேபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

‘‘வணக்கத்துக்குரிய பாதிரிமார்கள் இருவர் கையெழுத்திட்டுள்ள ஓர் ஆவணமும்என்னிடம் இருக்கிறது, அவர்கள் ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதி அதன் பிரதிகளை பிரதமருக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் சகல பா.உ.க்களுக்கும் அனுப்பிவைத்திருக்கின்றனர். அக்கடிதத்தில் வேறு பல விடயங்களுடன், பின்வருமாறு கூறுகின்றனர்.

‘‘அதி உத்தம ஜனாதிபதி அவர்களுக்கு—

‘‘கீழே கையெழுத்திட்டிருக்கும் யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த 85 குருமாராகிய நாம், பண்டத்தரிப்பில் எமது பிஷப்பின் தலைமையிலே கூடி அண்மைக்காலமாக நாட்டில் உருவாகிவரும் நிகழ்வுகள் பற்றி ஆழ்ந்த அக்கறையுடன் அணுகினோம்.

‘‘தற்போதுநடைமுறையிலிருக்கும் அவசரகாலச் சட்டத்தையும், பத்திரிகைத் தணிக்கைச் சட்டத்தையும் பொலிசாரும் இராணுவத்தினரும் துஷ்பிரயோகம் செய்து அப்பாவிகளான பிரஜைகளை அவமானப்படுத்தியும் பயமுறுத்தியும் வருவதை நாம் அவதானிக்கின்றோம், இதனால் பதட்ட நிலை மேலும் வளருகிறது. எனவே தீவின் ஏனைய பகுதிகளில் இருப்பது போன்று யாழ்ப்பாணத்திலும் சாதாரண நிலைமையை உருவாக்குமாறும் அவசரகாலச் சட்டத்தை அகற்றுமாறும் அரசிடம் வற்புறுத்திக்கேட்கிறோம்’

எனவே பொலீசாராலும், இராணு்வத்தினராலும் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கீனமான நடவடிக்கைகளை கண்டிப்பதிலே கூட்டணியினராகிய நாம் மட்டும் தனியாக ஈடுபடவில்லை. றோமன் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த 85 குருமாரும் எமக்கு அனுசரணையாக நிற்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் அவசரகாலநிலைப் பிரகடனப்படுத்தப்பட்டு சில மரணங்களும் சம்பவித்தபின்னர், ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று நானும் எதிர்க்கட்சித் தலைவரும் அவரைச் சென்று சந்தித்தோம். அவருடன் பிரதமர் அவர்களும், பிரிகேடியர் வீரதுங்காவும் இருந்தனர்;

ஜனாதிபதி, பிரிகேடியர் வீரதுங்காவிடம் இரண்டு மூன்று விடயங்களை திட்டவட்டமாக எடுத்துரைத்தார்: முதலாவது, ஒருவரைக்கைது செய்யும்போது, ஏ. எஸ். பி. அந்தஸ்துக்குக் குறைந்த எவரும் கைதுசெய்யக் கூடாது. இரண்டாவதாக ஒருவரைக் கைதுசெய்யும் போது, கைது செய்யும் அதிகாரியின் பெயர் விபரங்களை கைது செய்யப்படுபவரின் உறவினருக்குத் தெரியப்படுத்த வேண்டும். மூன்றாவதாக, பிரிகேடியரைப் பார்த்து ஜனாதிபதி பின்வருமாறு கூறினார்.

‘‘நீர் கைதுசெய்யும் ஆட்களின் உயிரை உமதுகைகளிலே ஒப்படைக்கிறேன். மனிதாபிமானமற்ற செயல்கள் எதுவும் இடம்பெறக்கூடாது’’

இந்தக் கட்டளைகளுடனேயே ஜனாதிபதி, திரு. வீரதுங்காவை இணைப்பு அதிகாரியாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தார். ஆனால் நான் மனவருத்தத்துடன் கூறுகிறேன் — சிவில் உடையில் வந்து ஆட்களைக் கைதுசெய்கிறார்கள்; தங்கள் அடையாளத்தையோ எந்த அதிகாரத்தின் கீழ் தாம் கைது செய்கிறோம் என்பதையோ கூறாமல் ஆட்களை கைது செய்கிறார்கள்—கைது செய்யும் அதிகாரி யாரென்பதோ, கைது செய்யப்படுபவர் எங்கேகொண்டு செல்லப்படுகிறார் என்பதோ உறவினர்களுக்கு கூறப்படுவது இல்லை. இது ஒரு தடவையல்ல, இருதடவையல்ல, பலதடவைகளில்நடைபெற்றுள்ளன.

சட்டம். ஒழுங்கு என்ற பெயரின் கீழ் சட்டவிரோதமானநடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. யாராவது ஒருவர் காணப்படாவிடின், அவரது தந்தை, தாய், சகோதரர் ஆகியோர் கைது செய்யப்படுகிறார்கள். தேடப்படும் ஆள் ஆஜர் செய்யப்படுமட்டும் இவர்களை காவலில் வைக்கிறார்கள்; யுத்த காலத்தில்தான் இவ்வாறு செய்யப்படுவது வழக்கம். பணயக் கைதிகளை இராணுவத்தினர் கொண்டு செல்வது வழக்கம். சமாதான காலத்தில் இப்படி நாம் கேள்விப்பட்டதில்லை. ஒருவரின் இருப்பிடத்தை அறிவதற்கு ஆயுதப்படைகளால் முடியவில்லையென்றால், அதற்காக அவருடைய தாயை தந்தையை சகோதரரை பணயக் கைதிகளாகக் கொண்டு செல்கிறார்கள்;

காணாமல் போய்விட்டவர் என்று கருதப்படும் ஒரு பெண்ணைப்போல. அதே ரகமான பொட்டு வைத்ததற்காக கொழும்பில் ஒரு பெண் கைது செய்யப்பட்டார். அவர்கள்யாரோ ஒருவரைத் தேடுகிறார்கள்-ஒரே மாதிரியான பொட்டு வைத்



திருந்ததற்காக, ஆள்மாறாட்டமாக இன்னொரு பெண்ணைக் கைது செய்திருக்கிறார்கள். இந்தப் பெண்ணுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு என்னதான் காரணமோ? இந்தப்பெண் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மூன்று நாள் காவலில் வைக்கப்பட்டுபின் விடுதலை செய்யப்பட்டார்.

கௌரவ தொழிலமைச்சர் முந்திய அரசினால் சிறையிடப்பட்டதன் காரணமாக அவருக்கு ஏற்பட்ட நோய் குறித்து அரசாங்க உறுப்பினர்களுக்கு இன்னும் தணியாத கோபம் இருக்கிறது; யாழ்ப்பாணத்திலும் இன்று இருவரது நிலை இதே தான். ஒருவர் மனநோயாளியாகி விட்டார்; மற்றவரோ அவருக்கு செய்யப்பட்ட துன்புறுத்தல் காரணமாக மாரடைப்பு நோயாளியாகி அவஸ்தைப்படுகிறார்.

எங்கள் இயக்கத்தின் மத்திய செயற்குழுவைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். என்ன காரணம் என்று எமக்கு இன்னும்தெரியாது. இந்த அரசு பொறுப்பேற்றதும், சி.ஐ.டி.யின்4வதுமாடி அழிந்துவிட்டதென்று நாம் நினைத்தோம்; ஆனால் இப்போது, 4வது மாடி யாழ்ப்பாணத்திலுள்ள ‘‘றெசிடென்சி’’தான் என்று அறிகிறோம். 4வது மாடியில் நிகழ்ந்ததனைத்தும் யாழ் அரசாங்க வாசஸ்தலத்தில் இன்று நடைபெறுகிறது. எரியும் சிகரெட் துண்டினால் சுடுவதுதான் அங்கு இடம் பெறும் சாதாரண துன்புறுத்தல்!

சிறைப்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்ட சில இளைஞர்களைச் சந்தித்துப் பேசிவிட்டுத்தான் இவற்றை இங்கு கூறுகிறேன். அவர்களது பெயரை நான் இங்கு வெளியிட முடியாது, ஏனெனில், இங்கு நடைபெற்றவைகளை நீங்கள் வெளியே போய்ச் சொன்னால், திரும்பவும் இங்கு அழைத்துவரப் படுவீர்கள்; முன்பு இரண்டு இளைஞர்களுக்கு என்ன நடந்ததோ அதுவே உங்களுக்கும் பின்பு நடக்கும்’’ என்று பயமுறுத்தி அனுப்பப்படுகிறார்கள். அதனால்தான் அவர்களின் பெயரை இங்கு நான் குறிப்பிட முடியாத நிலையிலிருக்கிறேன். ஆனால் அங்கு சிறைவைக்கப்பட்டு விடுதலையாகிவந்தவர்களின் சாட்சியங்களைக் கொண்டுதான் நான் இங்கு ஒவ்வொரு வார்த்தையையும் உச்சரிக்கிறேன்.

இரண்டு கதிரைகளை இடைவெளிவிட்டு வைத்து, அதன் மீது ஒரு தடியைப் போட்டு, அத்தடியின் மீது சந்தேக நபரின் கால்களையும் வளைத்துக்கட்டிவிட்டு, சந்தேக நபரைச் சுழற்றுவது மற்றோர் வகைச்சித்திரவதையாகும்.

வவுனியா மாவட்ட அமைச்சர்: நல்ல உடற் பயிற்சி.

எம், சிவா. நல்ல உடற்பயிற்சியா மாவட்டஅமைச்சரே? அதைநீரும் ஒருமுறை அனுபவித்தால்எப்படியிருக்கும் என்று தெரியும் நான் விரும்புகிறேன்— மாவட்ட அமைச்சரும்.........’’

ஹருள்ள: அவர்களில் சிலர் அதையும் அனுபவித்தவர்கள்தாம்.

எம்;சிவா- ஆனாலும் இன்னும் அவர்கள் பாடம் படிக்கவில்லை. மூக்கிலும்மற்றும் உடலிலுள்ள உணர்ச்சி மிக்க இடங்களிலும் மிளகாய்த்தூள் தூவுதல் இன்னோர் சித்திரவதை அவர்களுக்கு உணவு வழங்கப்படுவதில்லை. குடி தண்ணீர்துளி துளியாகவே வழங்கப்படுகிறது, அவசரகாலச்சட்டத்தின் பெயரால் யாழ்ப்பாணத்தில் இவ்வளவும் நடைபெறுகிறது;

மூன்றுபேர்கூட கொள்ள முடியாத கூடு (cell) ஒன்று யாழ் பொலிஸ் நிலையத்திலிருக்கிறது. அங்கே ஒரே ஒரு சீமந்து மேடை உண்டு; அதிலே ஒருவர் தூங்கலாம், ஏனைய இருவரும் அதற்குள் ஒருவாறு இருக்கலாம். ஒரு சமயம் மூன்று பேர் மட்டுமே இருக்கக்கூடிய இந்தப் பொலீஸ் கூட்டுக்குள் எட்டுப்பேர் ஒருமித்து அடைக்கப்பட்டார்கள். அவர்கள் அதற்குள் அசையவே இடம் கிடையாது. அந்த எட்டுப் பேருக்கும் குடிக்கவும் மலசலகழிவுத் தேவைகளுக்கும் என்று ஆக ஒரே ஒரு போத்தல் தண்ணீர் கொடுத்திருக்கிறார்கள்.

இம்மாதிரியாக நடத்துவதை ஐ.நா. சபை மிகவும் கடுமையாக கண்டித்திருக்கிறது. விலங்குகளைப் பயன்படுத்தக்கூடாது; சங்கிலி பாவிக்கக் கூடாது; எவ்வித தடைகளும் இடக்கூடாதென்று ஐ.நா. சபை கூறியிருக்கிறது ஆனால்பொலிசார்

—6-ம் பக்கம் பார்க்க

சுடர்
CHUDAR

ஐப்பசி இதழில்

இவ்விதழில்

புதுயுகம் பிறக்கிறது
காவலூர் எஸ். ஜெகநாதன்
(சிறுகதை)

சாய்ந்த கோபுரங்கள் நிமிர்கின்றன
—அன்ரனி மனோகரன்
(இம்மாத பரிசுக்கதை)

கலைப்பேரரசு
ஏ. ரி. பொன்னுத்துரை
அவர்களின் பேட்டி

கவியின் இரு கண்கள்
—கனக. பரமேஸ்வரன்
(இலக்கியக்கட்டுரை)

உணர்ச்சிக் கவிஞரின் ஆக்கங்கள்
—ச. ஸ்ரீ காந்தா
(ஒரு நோக்கு)

வீணையில் எழும் ராகங்கள்
— தமிழ்ப் பிரியா
(குறுநாவல்)

மற்றும் பல கவிதைகள், கட்டுரைகள்: துணுக்குகள், விஞ்ஞானத் தகவல்கள் போன்ற பல சுவையான ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
நிர்வாகி
இலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட்
194ஏ, பண்டாரநாயக்கவீதி,
கொழும்பு-12

# யாழ் மாவட்ட தணிக்கை அதிகாரி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிருர்!

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் அவசரகாலச் சட்டம் மீது 4-10-79 அன்று பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் இருந்து ஒரு பகுதி(ஹன்சார்ட் தொகுதி 6— இலக்கம் 7— பத்திகள் 989, 990 991)

''அவசர காலச் சட்டம் இந்த வழியில் மட்டும் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை; இன்னெர் வழியிலும் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. பத்திரிகைச் சுதந்திரம் மறுக்கப்படுவதும், வெளியீட்டுரிமை மறுக்கப்படுவதும் பற்றியே குறிப்பிடுகிறேன்.

ஒரே ஒரு சம்பவத்தை மட்டுமே குறிப்பிட விரும்புகிறேன்- பிரதி பொது நிர்வாக, உள்நாட்டமைச்சர் நான் என்ன பேசுகிறேன்; என்பதை அறியாது சுதந்திரனின் செப்டெம்பர் 19ம் திகதியஇதழ் தடைசெய்யப்பட்டது பற்றிக் குறிப்பிட்டார்,

தணிக்கை அதிகாரி, நாடு முழுவதும் ஆட்களை அனுப்பிப் பத்திரிகைப் பிரதிகளை கைப்பற்ற வேண்டிய அளவுக்கு, சுதந்திரன் வெளியிட்டிருந்த குறிப்பிட்ட கட்டுரை தான் என்ன?

மேன்மை தங்கிய ஜனுதிபதி ஜப்பானில் நிகழ்த்திய உரை சிலோன் டெயிலி நியூஸ் 12.9.79 இதழின் முன்பக்கத்தில் ஐந்தாவது பத்தியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது- அது பின்வருமாறு கூறுகிறது—

## பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அமிர் குற்றச்சாட்டு!

"The people of Sri Lanka, practising the same religion Buddhism, Speaking the same language. Sinhala, lived throughout the Island as an Independent Nation till 1815 for 2300 years"

இதுவே டெயிலி நியூசில் வெளிவந்த அறிக்கையாகும் லேக் ஹவுசின் தமிழ்ப் பத்திரிகையான தினகரனிலும். அதே வார்த்தைகளில் பின்வருமாறு மறுபிரசுரம் செய்யப்பட்டது.

''இலங்கை மக்கள் ஒரே மாதிரியான சமயத்தை— பௌத்த மதத்தைப்பின் பற்றி— ஒரே மாதிரியான மொழியை —சிங்களத்தைப் பேசி. நாடு முழுவதிலும் ஒரு சுதந்திர மக்களாக 1815 இல் இருந்து வாழ்ந்து வந்திருக்கிருர்கள்''

சுதந்திரன் பத்திரிகை ஜனுதிபதியின் இந்தப் பேச்



சையே வெளியிட்டு, அதன் கீழ் எந்தப்பத்திரிகைக்கும் உள்ள உரிமையின் பிரகாரம் — சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியரும் ஜனுதிபதியின் பேச்சையொட்டித் தனது கருத்துக்களையும்தெரிவித்திருந்தார். டெயிலி நியூசிலும், தினகரனிலும் பிரசுரிக்கக்கூடிய விடயங்கள், யாழ்ப்பாணத்தில் சுதந்திரனில் பிரசுரிக்கக்கூடாதவை போலத் தோன்றுகிறது.இதை வெளியிட்டதற்காகத்தான் தணிக்கை அதிகாரி அந்தஇதழை தடை செய்துவிட்டார்;

இம்மாதிரியாக, அவசர காலச்சட்டத்தின் கீழ் அங்குள்ள தகுதிவாய்ந்த அதிகாரியால் தணிக்கை செய்யும் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது; இதைத்தான் காவலூர் பாராளுமன்ற உறுப்பினர் விரிவாக இங்கு எடுத்துரைத்தார்;

'சன்'பத்திரிகையில் வெளியிடப்பட்டசெய்தியொன்று சுதந்திரனில் மறுபிரசுரம் செய்யப்பட்டபோது, அதற்கும் அனுமதியளிக்க தணிக்கை அதிகாரி மறுத்து விட்டார். இந்த துஷ்பிரயோகத்தை கொழும்பிலுள்ள தணிக்கை அதிகாரி சரத் அமுனுகமவின் கவனத்துக்குக் கொண்டுவந்தேன்;

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பற்றிய மதவாச்சி உறுப்பினர் திரு. மைத்திரிபால சேனநாயகாவின் அறிக்கையே அவ்வாறு தடுக்கப்பட்டதாகும். அச்செய்தி எல்லாப் புதினப்பத்திரிகைகளிலும் இடம்பெற்றிருந்தது—ஆனுல் யாழ்ப்பாணத்து தகுதிவாய்ந்த அதிகாரியோ சுதந்திரனில் அதை அனுமதிக்க மறுத்தார். நான் இதை—இலங்கை முழுவதற்கும் அவரே தகுதி வாய்ந்த அதிகாரி என்று கருதி—திரு. சரத் அமுனுகமவின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோது அவர் சொன்னுர்—''இல்லை, நான் யாழ் மாவட்டத்துக்கு வெளியேதான் தகுதி வாய்ந்த அதிகாரி; யாழ் மாவட்டத்துக்கு வேறுபட்ட தகுதி வாய்ந்த அதிகாரி இருக்கிருர்'';

இந்தப் பிரிவினை எப்போது ஏற்பட்டதென்று எனக்குத் தெரியாது; யாழ்ப்பாணத்துக்கு தனியாக தகுதி வாய்ந்த அதிகாரியை நியமித்தபோதே இந்தப் பிரிவினை ஏற்பட்டுவிட்டது போலத் தோன்றுகிறது'';

# சட்டியில் இருந்தாலன்றோ அகப்பையில் வரும்?

''மொழிப்பிரச்சினைக்கு முற்றுகத்தீர்வு காணப்பட்டுவிட்டது!''

''தமிழ் தேசிய மொழியாக்கப்பட்டு விட்டது?',

''இதுகாலவரை வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ளதமிழ் பேசும் மக்களின் மொழியுரிமைக்குமட்டுமே உத்தரவாதம்வழங்கப்பட்டிருந்தது; இப்போது வடக்குகிழக்குக்கு வெளியிலுள்ள22 இலட்சம் தமிழ் பேசும் மக்களுக்கும் புதிய அரசியல் சட்டத்தில் மொழியுரிமை வழங்கப்பட்டு விட்டது!'

''தமிழ் மொழியுரிமையை அமுல் நடத்துவதற் கெனதனியான தொரு அமைச்சரே நியமிக்கப்பட்டிருக்கிருர்''

இவ்வாறெல்லாம் ஜனுதிபதி முதல் ஐ. தே. கட்சியின் அமைச்சர்களும் ஐ.தே. கட்சிகளில் தொங்கிக் கொண்டிருக்கும் திருவாளர்கள் தேவநாயகம். கனகரத்தினம் தொண்டமான். இராசதுரை போன்ருேரும் ஒரே குரலில் சென்ற இடமெல்லாம் 'கோரஸ்'பாடி வந்தனர்.

இலங்கையில் மட்டுமல்ல— இந்தியாசென்றபோதும் அங்குள்ள பத்திரிகைகளுக்கும் அரசியல் தலைவர்களிடமும் இதே பல்லவியையே பாடினர்.

இவர்கள் கொடுத்த கயிற்றை விழுங்கிய சென்னை இந்து போன்ற பத்திரிகைகள், அரசியலமைப்புஉண்மையில் என்ன கூறுகிறதென்பதை ஆழ்ந்துநோக்காதுதமிழ் மொழி உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டதாக கூறிய இலங்கை அரசைப் பாராட்டித் தட்டிக்கொடுத்ததுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியைத் திட்டிக்கொண்டும் வந்திருக்கின்றன.

இலங்கை அரசியலமைப்பில் ''சிங்களம் மட்டுமே நாடு முழுவதும் உத்தியோகமொழி என்ற விதியும் ''சிங்களம் மட்டுமே நாடு முழுவதற்கும் நீதிநிர்வாகமொழி'' என்ற விதியும் இடம் பெற்றிருக்கும் வரை—தமிழ்மொழியுரிமைகள் என்பது வெறும் கண்துடைப்பாக—மலடிவயிற்று மகனுக—ஏட்டுச் சுரைக்காயாகவே இருந்துவரும் என்பது நமது திடமான கருத்தாகும். சிங்களம் மட்டும் என்ற நிலை அகற்றப்பட்டு சிங்களமும் தமிழும் சம அந்தஸ்துள்ள உத்தியோக மொழிகள் என்பதற்கு உத்தரவாதமில்லாதவரை—தமிழ்புறக்கணிப்பும் சிங்களம்படிக்காத தமிழ் அரச ஊழியர் பிரச்சினைகளும் மூக்குள்ளவரை சளிபிடிப்பது போல—தொடர்ந்து இருந்துவரும் என்பதே நமது உறுதியான கருத்தாகும்;

தமிழ் தேசிய மொழியென்பது வெறும் கண்துடைப்பு; தமிழுக்கு உண்மையான அந்தஸ்து கிடைக்க வேண்டுமானுல், தமிழும் உத்தியோக மொழியென்பது அரசியல் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட வேண்டும், சிங்களம் மட்டுமே உத்தியோகமொழி; தமிழ் தேசிய மொழியென்பது ஒருமாயமான்.

இந்தப் பாரிய உண்மைகள் மிகவிரைவில் வெளியே தெரியவரும்— கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்குள் அம்பலமாகும்—அரசியலமைப்பில் தமிழ் மொழியின் ஸ்திரமற்ற நிலை அம்பலமாகும் என்று நாம் அமைதியாகக் காத்திருந்தோம்.

இன்று அரசியலமைப்பில் தமிழ்மொழியின்அந்தஸ்து எத்தகையது—அதிலுள்ள ஓட்டை உடைசல்கள் எவை எவையென்பது—நீதிமன்ற வாயிலாக ஒவ்வொன்ருக அம்பலத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன.

## எண்ணம்

புதிய அரசியலமைப்பின்படி வடக்குகிழக்குக்குவெளியேதமிழ்ப் பிரஜை ஒருவனுக்கு தமிழில் காசோலையைப் பெற்றுக்கொள்ளும் உரிமைகிடையாதென்பது ஆடியபாதன் மொழிவழக்கில் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் வாயிலாக அம்பலத்துக்கு வந்தது—

இதுபற்றி தேவநாயகமும் தொண்டமானும் இராசதுரையும் கனகரத்தினமும் ஜனுதிபதியும் இதுவரை எதுவுமே கூருது மௌனம் சாதித்து வருகிருர்கள்,

இப்போது மற்ருேர் வழக்கில் புதிய அரசியலமைப்பு விதிகளின்படி வடக்குகிழக்குக்கு வெளியே உள்ளநீதிமன்றங்களில் தமிழில் மனுவைத்தாக்கல் செய்ய உரிமை கிடையாது —சிங்களத்திலேயே மனுக்களைத் தாக்கல் செய்ய வேண்டுமென்று கொழும்பு மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிபதி திரு. கே, விக்னராஜா தீர்ப்பு வழங்கியிருக்கிருர்.

இப்போது நீதியமைச்சர் தேவநாயகமும் தொண்டமானும் இராசதுரையும் என்ன கூறப்போகிருர்கள்? அரசியலமைப்பு தெரிவுக்குழுவில் அங்கம் வகித்து இவர்கள் பெற்றுள்ள தமிழுரிமைகள் இவ்வளவுதானு? அரசியலமைப்பு அமுலுக்குப் பொறுப்பான நீதியமைச்சர் இதற்கு என்ன சமாதானம் சொல்லப்போகிருர்?

எதைத்தான் இவர்களால் சொல்ல முடியும்? சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்?

# ஐக்கிய தேசியக் கட்சிக்குள்

# தலைமைபதவிக்குகுத்துவெட்டு

## பிரேமதாசாவுக்கும்ஜே.ஆருக்கும்இப்போதுசமபலம்!"

"ஐக்கியதேசியக்கட்சியில் பிரதமர் பிரேமதாசா வீட்டோ அதிகாரத்தைப் பெற்று விட்டார். ஐ.தே.க, பாராளுமன்றக் குழுவில் உள்ள 140 பேரில்70 பேரை பிரேமதாசா குழுவும் 70 பேரை ஜே.ஆர். குழுவும் கட்டுப்படுத்துகிறது. இந்த அதிகாரச் சமபலம் அல்லது அச்சத்தின் சமபலம்காரணமாகவே திரு. பிரேமதாசாவுக்கு வீட்டோ அதிகாரத்தை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஜே. ஆருக்குஏற்பட்டுள்ளது. தனது அதிகாரம் வளர்ந்து வருவதையும் பிரேமா—லலித் இணக்கமேற்பட்டதையும் தொடர்ந்து திரு, பிரேமதாசா ஐக்கிய தேசியக்கட்சிக்குள் அதிகார அமைப்புமுழுமையாக மறுசீரமைக்கப்படவேண்டுமென்று வலியுறுத்தத் தொடங்கியிருக்கிறார்,

எதிர்வரும் ஐ.தே: கட்சியின் ஆண்டுக்கூட்டத்தில் அக்கட்சிக்குள்இருந்துவரும் அச்சத்தின் சமபலம் பலமாக எதிரொலிக்கப் போகிறது. கட்சிக்குள் கட்டுப்பாட்டை அமுல்படுத்துவதில் ஜே; ஆருக்கு இது இறுதியானதாகவும் பிரேமதாசாவுக்கு முதல் முயற்சியாகவும் இதுஅமைந்துவிடலாம்.

ஜே,ஆர்—டட்லிகூட்டுக்கு எதிராக 1971ம்ஆண்டுகாலியில் திரு. பிரேமதாசாபுரட்சிக்கொடியை உயர்த்திப் பிடித்ததையும்தன்னுடைய பிரஜைகள் முன்னணியை உருவாக்கியதையும் மக்கள் நினைவில் வைத்துள்ளனர், ஐ,தே.க. வட்டாரம்போட்டுள்ள கணக்குப்படி திரு, பிரேமதாசா குழுவின் சுறுசுறுப்பானதும் வெளிப்படையானதுமான ஆதரவின்றி காலி இடைத்தே லில் ஐ:தே:க. வெற்றிபெற முடியாது.

ஐ தே. கட்சியின் உட்கருத்தும் கணக்கும் இப்படியாகத்தான் இருக்கிறது

### நேஷன் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம்

ஆனால் 1977ம் ஆண்டிலிருந்து ஐ.தே.கட்சியின்பற்றிவரும் மக்கள் விரோதக் கொள்கைகள் தொழிலாளர்கள் விவசாயிகள் மாணவர்கள் அரசரங்க ஊழியர்கள் மத்திய தரவகுப்பினர் உள்ளூர்உற்பத்தியாளர்கள் அறிவாளிகள் ஆகிய அனைவரையும் அதனிடமிருந்துவிலகிச் செல்ல வைத்துள்ளன. ஐக்கியதேசியக் கட்சியால் தனது கட்சி உறுப்பினர்களையே தன்னோடுவைத்துக் கொள்ளமுடியவில்லை. ஏறத்தாழ 4500 கட்சிக்கிளைகளில் பணியாற்றிய இயங்கும்உறுப்பினர்களில்பெரும்பாலோர் 1983ம் ஆண்டு வரவிருக்கும் கணக்குக்காட்டவேண்டிய நாளைத் தவிர்ப்பதற்காக மத்திய கிழக்குக்கு சென்று விட்டார்கள். ஐ தே.கட்சி இன்று அணைதயான ஓர் அமைப்பாக பிரேமதாசாவின் புழுகுகளாலும் லேக்ஹவுசின் வெள்ளைப்பூச்சாலும் மட்டுமேகாப்பாற்றப்பட்டுவருகிறது.

ஜே.ஆரும் பிரேமதாசாவும் மேற்கொண்ட வெளிநாட்டுப்பயணம் தோல்வியில் முடிந்துவிட்டது; தமது வெளிநாட்டு எசமானர்களை திருப்திப் படுத்துவதற்காக எந்தவழியில் என்றாலும் காலி இடைத்தேர்தலில் வென்றேதீர வேண்டிய நிலை ஐ.தே.கட்சிக்கு. தனது வெளிநாட்டுத் தோற்றத்தை காப்பாற்றுவதற்கு இந்த யன்னலுக்குத் திரைபோடும்வேலை அதற்கு அவசியமாகிறது. ஆனால் அந்சோ அதன் அதிர்ஷ்டம் மங்கிவிட்டது. தனக்கு 1977ல் வாக்களித்த3.1மில்லியன் வாக்காளர்களில் காலித்தொகுதிக்கு வேட்பாளராக நிறுத்துவதற்கு ஒருவரைக் கூடத் தேடி பிடிக்க முடியாதஅளவுக்கு ஐ.தே, கட்சியின் ஆதரவாளர்கள் பிளவுபட்டுநிற்கிறார்கள்—

ஆறில் ஐந்து பெரும்பான்மையை வைத்திருக்கும் ஒரு கட்சியால்—சிகிரியா குன்று போல் ஒரே அமைப்பாக இருப்பதாகக் கூறும் கட்சியால்— விஜயனுக்குப்பின் பலமான அரசை அமைத்துள்ளதாக பெருமையடிக்கும்கட்சியால்காலி இடைத்தேர்தலில் போட்டியிட ஒரு வேட்பாளரைக் கூட கண்டுபிடிக்க முடியவில்லை.

அரசியல் கழைக் கூத்தாடித்தனத்தில் இறங்கி தனது தலைமைப்போட்டியை யூ,என். பி. தீர்த்துக் கொள்ளுமா? கட்சியைச் சேராத வேட்பாளர்கள்பிரதமரைக்கடந்து செல்லமுடியுமா? இவைதான் அரசியல் ரீதியாக வங்குரோத்தாகிவிட்ட யூ:என். பி. தனது 3வது பட்ஜட்டின் போது எதிர் நோக்கும் பிரச்சினைகளாகும்.

—நேஷன் (ஆசிரியத் தலையங்கம் 19-10.79)

## அவசரகாலச் சட்ட விவாதத்தில் எஸ். டி. பண்டாரநாயகா பேச்சு

எஸ். டி, பண்டாரநாயகா: தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய செயற்குழுவின் தலைவரால் பிரதமருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை இப்போது இங்கு வாசிக்கிறேன்;

### தணிக்கை

சபாநாயகர்: ஒழுங்கு! எந்த ஆவணத்தை நீங்கள் வாசிக்கிறீர்கள்?

எஸ். டி: பிரதமருக்கு கையளிக்கப்பட்ட ஆவணம் ஒன்றை!

சபாநாயகர்: அது ஒரு நம்பிக்கையான ஆவணம் என்பதற்கு நீங்கள் பொறுப்பு ஏற்கிறீர்களா?

எஸ். டி: ஆம், ஐயா.

சபாநாயகர்: அந்த ஆவணம் யாரால் அனுப்பப்பட்டுள்ளது?

எஸ்; டி; தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மத்திய குழுவின் தலைவரால் அனுப்பப்பட்டது,

சபாநாயகர்: இங்கு நீங்கள் அந்த ஆவணத்தை வாசிக்க முடியாது. அது பற்றிக் குறிப்பிடலாம். உங்களுக்கு சபையின் மரபு தெரிய வேண்டும். இந்த ஆவணத்துக்கு நீங்கள் பொறுப்பு ஏற்பீர்களா?

எஸ். டி; நான் இதற்கு பொறுப்பு ஏற்கிறேன்' எப்படியிருப்பினும் இந்த ஆவணம் எனக்கு அனுப்பப்பட்டது. (குறுக்கீடு)

சபாநாயகர்: இந்த ஆவணத்தை எழுதியது யார் என்று தெரியுமா?

எஸ். டி: எனக்குத் தெரியும் இந்த ஆவணம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மத்திய குழுவின் தலைவரால் எனக்கு அனுப்பப்பட்டது.

அத்தநாயகா: தலைவரின் பெயரென்ன?

சபாநாயகர்: ஆவணத்தின் உள்ளடக்கத்துக்கும்: அதன் நம்பிக்கைக்கும் நீங்கள் பொறுப்பு ஏற்பீர்களா?

எஸ். டி. அந்தப் பிரச்சினை எழவில்லை ஐயா!

சபாநாயகர்: ஆவணத்தின் நம்பிக்கைக்கும் அதன் உள்ளடக்கத்துக்கும் நீங்கள் பொறுப்பேற்றாலன்றி அதனை இங்கு வாசிக்க நான் அனுமதிக்க முடியாது.

(ஹன்சார்ட் 4-10.79)

## பட்டிருப்பு பா.உ.க்கு தனிச் சிங்களக் கடிதம்!

பட்டிருப்பு பா.உ. திரு; பூ, கணேசலிங்கம் அவர்களுக்கு மட்டக்களப்புக் கச்சேரியின் காணிப்பிரிவிலிருந்து தனிச்சிங்களக்கடிதம் ஒன்றுஅனுப்பப்பட்டுள்ளது இதையடுத்துமட்டக்களப்பு கச்சேரி நிர்வாகம் எந்த மொழியில் நடைபெறுகிறதென்பது குறித்து திரு; கணேசலிங்கம் விளக்கம் கோரியுள்ளார். பிரதேச அபிவிருத்தி அமைச்சர்இராசதுரை, நீதியமைச்சர் தேவநாயகம், மாவட்ட அமைச்சர் கனகரெத்தினம்இப்படி தடுக்கிவிழுந்தாலும்அமைச்சர்கள் மீதே விழ வேண்டிய அளவுக்கு மட்டக்களப்பு மாவட்டம் காட்சியளித்தும்கூடமட்டக்களப்பு கச்சேரியிலிருந்து பட்டிருப்பு பா,உ.வுக்கு தனிச்சிங்களக்கடிதம் போகிறதென்றால் இந்த அமைச்சர்களுடைய கையாலாகாத் தன்மை புரிகிறதல்லவா?

# சுதந்திரம் கோரும் பாஸ்க் இன மக்கள்

# சுயாட்சியை அங்கீகரிப்பார்களா?

## வியாழனன்று நடைபெறுகிறது வாக்கெடுப்பு

பூரண சுதந்திரத்துக்காக போராடி வரும் ஸ்பானியாவின் வடபகுதியிலுள்ள பாஸ்க் கற்றலோனியா ஆகிய பிரதேசங்களுக்கு சுயாட்சி வழங்கும் ஒப்பந்தம் ஒன்றை மட்ரிட் அரசாங்கம்செய்துள்ளது. சுயாட்சி மீதான பொதுஜன வாக்கெடுப்பு பாஸ்க் கற்றலோனியா பிரதேசங்களில் வியாழக்கிழமை 25-10.79 நடைபெற விருக்கிறது. பூரண சுதந்திரத்துக்குப்பதிலாக சுயாட்சியைபாஸ்க்கற்றலோனியா மக்கள் ஏற்பார்களா அல்லது நிராகரிப்பார்களா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

40 ஆண்டுகாலம் மட்ரிட் அரசாங்கத்தின் நேரடி ஆட்சியின் கீழ் இருந்து வந்த இந்த இரு பிரதேசங்களுக்கும் சுயாட்சி அந்தஸ்து வழங்க இப்போது ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளது.

எனினும் ஈ.ரி,ஏ, என்ற பாஸ்க் தீவிரவாத இயக்கம் இந்தவாக்கெடுப்பை பகிஷ்கரிக்குமாறு பாஸ்க்மக்களைக் கோரியுள்ளது. இதனல் குறிப்பிடத்தக்க அளவு வீதமான வாக்குகள் சுயாட்சிக்கு ஆதரவாக கிடைக்குமா என்பதையிட்டு பாஸ்க்மிதவாதத்தலைவர்கள் அஞ்சுகின்றனர்.

ஸ்ப்பானிய பிரதமர் அடோல்ப் ஸ்குவாரசுக்கும் இதே பயம் இருந்து வருகிறது. சுயாட்சி வழங்கப்பட்டுவிட்டால் தனிநாடு கோரும் E,T.A. கெரில்லாக் குழு அழிந்து விடுமென்று பாஸ்க் இடதுசாரி எதிர்க்கட்சி கருதுகிறது,

E;T Aயின் இராணுவப் பிரிவு இந்த ஆண்டு ஏறத்தாழ எழுபது பேரைக் கொன்றிருக்கிறது. சுயாட்சி அந்தஸ்தை நிராகரிக்கிறது தொடர்ந்தும் கொஞ்சம் கூட விட்டுக்கொடாமல் சுதந்திர சமதர்ம பாஸ்க் நாட்டு விடுதலைக்காகப் போராடி வருகிறது,

இந்தE;T.A கெரில்லா விடுதலை இயக்கத்தைஇடதுசாரிக் கூட்டணியான மக்கள் கூட்டணி ஆதரிக்கிறது: வியாழனன்று நடைபெறும் வாக்கெடுப்பைபகிஷ்கரிக்குமாறு அது தனது ஆதரவாளர்களைக் கோரியுள்ளது.

இந்த ஆண்டு நடைபெற்ற இரண்டு தேர்தலில் மக்கள் கூட்டணி பாஸ்க்பிரதேசத்தில்3 மாகாணங்களில் 15 வீதமான வாக்குகளைப் பெற்றுள்ளது கூட்டணியின் பகிஸ்கரிப்பு வேண்டுகோளுக்கு 50 அல்லது 55 வீதமானோர் செவி கொடுக்கக் கூடும்.

மிதவாத பாஸ்க் தேசியத் தலைவர் ஒருவரின் கூற்றுப்படி 60 வீதமானோர் வாக்கெடுப்பில் கலந்துகொண்டாலே அது ஒரு பெரிய வெற்றியாகும்,

வாக்கெடுப்பை பகிஷ்கரியுங்கள்—சரணுகதியடையாதீர்கள் என்ற இடதுசாரி மக்கள் கூட்டணியின் சுவரொட்டிகள் பாஸ்க் தலைநகரெங்கும் காணப்படுகிறது.

பாஸ்க்நாட்டின் சுயநிர்ணயக் கோரிக்கை அலட்சியப் படுத்தப்படாததால் E.T.A இயக்கம் தனது கொலைகளை நிறுத்தக்கூடும் என்று ஒரு சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

அதேசமயம் மட்ரிட் அரசாங்கமும் தீவிரவாத மக்கள் கூட்டணி தவிர்ந்தஏனைய அரசியற்கட்சிகளும்சுயாட்சி வழங்கப்பட்டதும் E.T.A கெரில்லாக்களுக்கு இப்போது இருந்துவரும்மக்கள் ஆதரவுமறைந்துவிடுமென்று எதிர்பார்க்கின்றனர்.

சுயாட்சி அமைப்புக்களில் பாஸ்க் மொழியும் கற்றலான் மொழியும் உத்தியோகமொழிகளாக விளங்கும். இந்த இருமொழிகளுக்குமிடையே அற்பமான வித்தியாசமே உண்டு.

சுயாட்சி அந்தஸ்தின் கீழ் பிரதேச அரசுகளுக்கு உள்ளூர் பொலிஸ்படை வைத்துக் கொள்ளவும் கல்வி போக்குவரத்து சுகாதாரம் உல்லாசப்பயணத்துறைஉள்ளூர் வர்த்தகம் ஆகியதுறைகளில் அதிகாரம் செலுத்தும் உரிமையும் வழங்கப் பட்டுள்ளன.

பிரதேச அரசுகள் தமது சொந்த நீதித்துறையை வைத்துக்கொள்ளவும் தமக்கு வேண்டிய சட்டங்களை உருவாக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.




''அசலும் நகலும்''
மில்க்வைற் நீல சோப்

நீலவுறை சுற்றி மில்க்வைற் வி.எம்.கே. (V.M.K.) என எழுதிவரும் உங்கள் அபிமானத்துக்குரிய சோப்பை அவதானித்து வாங்குங்கள். மில்க்வைற் மேலுறையின் சாயலில் மில்க் என்றே பெயருள்ள தயாரிப்புக்கள் உலாவுகின்றன. எழுத்துக்களின் அளவு நெளிவு, அமைப்பு ஒரே மாதிரியிருக்கின்றன. வி.எம்.கே. (V.M.K.)எழுத்துக்களை அவதானித்து வாங்குங்கள். நன்றி,

மில்க்வைற் நீல சோப்
தொழிற்சாலை
த. பெ, எண். 77,
யாழ்ப்பாணம்.

## இந்துமத மாநா —

—7-ம் பக்கத் தொடர்

திரி பதவி கொடுத்திருக்குமா?

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்று தமிழ் நாட்டில் ஒரு பழமொழி சொல்வார்கள். அதைப்போல் இந்துமதமாநாட்டை இலங்கையில் நடத்த இராசதுரைக்கு செயவர்த்தன சுதந்திரம் அளித்திருக்கிறார் என்றால், மேற்குறித்த காரணங்களுக்காக மட்டுமின்றி: இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மொத்த இந்தியாவின் அனுதாபத்தையும்தனக்கு ஆதரவாகத் திருப்பிக் கொள்ளத்தான் சிங்களவர்கள் பௌத்தர்கள் என்பதால், இந்துக்களே பெரும்பான்மையினரான தமிழர்களின் பக்கம் இந்தியாவின் அனுதாபம் திரும்பிவிடக்கூடாது என்பதற்காகத்தான்.

செஞ்சோற்றுக் கடனுக்காக இராசதுரைகள் தான் இதற்குக் கருவிகளாகப் பயன்படுகிறார்கள் என்றால், மத உணர்ச்சியால். மற்றதை மறந்து ஏனைய இலங்கைத் தமிழர்களும் ஏமாந்து போய் விடக்கூடாது என்பதே நமது எச்சரிக்கை.

ஏனென்றால்,இங்கே இந்து மதத்துக்காக வரிந்து கட்டிக் கொண்டிருப்பவர்கள் இன்பத் தமிழுக்கு எதிரிகளாகவே இருக்கிறார்கள். இவர்கள் பங்குபெறும் மாநாட்டில் இலாபத்தை விட நட்டமே அதிகமாகும்.

நன்றி: மர்மம்

## "14 பேர் கொல்லப்பட்டனர் என்பதற்....

—3-ம் பக்கத் தொடர்

என்ன செய்கிறார்கள்; கைதிகளை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குக் கொண்டு செல்லும்போதுஅவர்களின் கைகளைஜீப்பின்மூகட்டுடன் சேர்த்துப்பிணைத்துவிடுகிறார்கள்.

ஓர் உறுப்பினர்: அவர்களின் பாதுகாப்புக்காக!

எம். சிவா: அவர்களின் பாதுகாப்புக்காக! ஆம் குளிரூட்டப்பட்ட இச்சபையில் வசதியாக அமர்ந்துகொண்டு பாதுகாப்புப்பற்றி யாரும் பேசலாம்இந்தக்கைதிகளின் கைகளைப் பிணைத்து கொடூரமான வெய்யிலில் நிறுத்தி வைத்து அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் தருமட்டும் துன்புறுத்துகிறார்கள். இவை யாழ் அரசாங்க வாசஸ்தலத்தில் நடைபெறுகிறது.

கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் வழக்கமான தமது கோவைகளுடன் சபையில் உட்கார்ந்திருப்பதைப் பார்க்கிறேன் 1972ம் ஆண்டிலிருந்து இதுவரை14 கொலைகள் நடைபெற்றிருப்பதாக அவர் நிச்சயமாக கூறுவார் என்பது எனக்குத் தெரியும். 14 கொலைகள் நடந்ததென்பதற்காக குற்றமற்றவர்கள் கைது செய்யப்படுவது என்னநீதிஎன்று நான் உங்களைக்கேட்கிறேன் 14 கொலைகள் நடந்துவிட்டது என்பதற்காகஅப்பாவிகள் துன்புறுத்தப்படுவது என்ன நீதி என்று நான் கேட்கிறேன்.

(குறுக்கீடுகள்)—ஆம்நிச்சயமாக அவர்கள் அப்பாவிகள் தாம். நீங்கள் அவர்களுக்குஎதிராககுற்றப்பத்திரிகையைத்தாக்கல்செய்துவிட்டுபின் என்ன நடக்கிறதென்றுபாருங்கள்.

ஓர் உறுப்பினர்; அவர்கள்மீது குற்றம் சுமத்தப் பட்டது.

எம். சிவா: குற்றம் சுமத்துவது பற்றி பரவாயில்லை. அப்பாவிகள் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைசெய்யப்படுகிறார்கள், அவர்களிடமிருந்து பலவந்தமாக ஒப்புதல்வாக்கு மூலங்கள்பெறப்படுகின்றன, இந்த ஒப்புதல் வாக்கு மூலம் குறித்து ஒரு சுவையான கதை உண்டு.

துரையப்பா கொலைவழக்கில் ஒரு குறிப்பிட்ட இன்ஸ்பெக்டர் ஒப்புதல் வாக்கு மூலத்தைப்பெற்றார் இதன் பின் சட்டம் திருத்தப்பட்டது— ஏ.எஸ்பி. தரத்திலுள்ள ஒருவர் ஒப்புதல் வாக்கு மூலத்தை எடுத்திருந்தாலேநீதிமன்றம் ஏற்கும் என்று, இதன்பின் ஒரு விசித்திரமான நிகழ்ச்சி நடந்தது. அதே ஆள் இரண்டு ஆண்டு கழித்து ஏ.எஸ்,பி; ஒருவரிடம் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்திருக்கிறார், இரண்டு வருடங்களுக்கு முன்பு கூறிய அதேசொற்களை புள்ளி, அரைப்புள்ளி, கால்புள்ளி மாறாமல் அப்படியேஒப்புதல் வாக்கு மூலம் அளித்திருக்கிறார். இவ்வழக்குகளில் ஒப்புதல் வாக்கு மூலங்கள் இப்படித்தான் பெறப்படுகின்றன, அவசரகாலச் சட்டம் நீடித்தால்இதேநிலையே நீடிக்கும்,

அவசரகாலச் சட்டத்தாலும் பொலிஸ் நடவடிக்கைகளாலும் அரசியல் பிரச்சினையை தீர்த்துவிடமுடியாது ஆகஸ்ட் 27 நியூஸ்வீக் பத்திரிகையிலே சுவையானகட்டுரைபிரசுரமாகியுள்ளது. வட அயர்லாந்து பற்றிய கட்டுரைஅது. குழப்பங்களைஅடக்குவதற்கென பத்து ஆண்டுகளுக்கு முன் பிரிட்டிஷ் துருப்புக்கள் வட அயர்லாந்துக்கு அனுப்பப்பட்டன. சிலநாட்களில்வடஅயர்லாந்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டிவிட முடியுமென பிரிட்டிஷ் துருப்புக்கள்கருதின. பத்து ஆண்டுகள் கழித்து பிரிட்டிஷ் இராணுவ பொறுப்பதிகாரி என்ன நடக்கு மென்பதையிட்டு பின்வருமாறு கூறியிருக்கிறார். ',இன்னும் பத்து ஆண்டு கழித்துவாருங்கள்—அப்போது என்றால் ஏதாவது ஒரு கணிப்பை கூறக்கூடும்;' பத்தாண்டுகளாக வடஅயர்லாந்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட முயன்று வரும்பிரிட்டிஷ் இராணுவத்தலைவனின் கூற்று இது,

ஆக—அரசியல் பிரச்சினைக்கு அவசரகாலச்சட்டமோ ஆயுதப்படைகளின் நீதியற்ற ஆட்சியோ ஒருபோதும் தீர்வு கண்டுவிட முடியாது.

யாழ்ப்பாணத்து நிலைமை எப்படியிருக்கிறதென்று சர்வதேசமன்னிப்புச் சபையின் பிரதிநிதியாக இங்கு வந்திருந்தபெண்மணியிடம் கேளுங்கள். அவர் எமதுசம்பளத்தில் வேலைசெய்பவரல்ல அவரிடமிருந்துயாழ்ப்பாணத்துநிலைபரத்தை அறியுங்கள்!''

—(ஹன்சார்ட் (4.10.79) தொகுதி 6, இல,7)

## சுடர் விற்பனை பிரதிநிதிகள் தேவை

ஒரு சஞ்சிகைக்கு இரண்டு ரூபா வீதம்முற்பணம்செலுத்த வேண்டும். காசுக்கட்டளை/தபாற் கட்டளைகளை அனுப்பவேண்டிய முகவரி;

நிர்வாகி,
சிலோன் நியூஸ்
பேப்பர்ஸ் லிமிட்டெட்,
194 ஏ. பண்டாரநாயகா வீதி,
கொழும்பு-12.

# இந்துமத மாநாடும் தமிழ்பேசும் மக்களும்!

## தமிழக இதழின் எச்சரிக்கை

மலேசியாவிலிருந்துடாக்டர் சூசை தமிழ்நாட்டுக்கு வந்திருந்தார். அவர் அமைச்சரல்ல. மலேசியாவில் எந்த அதிகாரமும் பெற்றிருக்கவில்லை;

என்றாலும் அவரை வரவேற்றோம். பாராட்டுக் கூட்டம் நடத்தினோம் வாழ்த்துமடல்படித்துக் கொடுத்தோம்; காரணம் அவர் தமிழ மறையாம் திருக்குறளை மலாய் மொழியில் மொழியாக்கம் செய்திருந்தார், பாரதியை பாவேந்தரை மலாய் மக்களுக்கு அவர்கள் மொழியிலேயே அறியத்தந்திருந்தார்;

அதே நேரத்தில் இலங்கையிலிருந்து ஒரு அமைச்சர் வந்திருந்தார். இக்கட்டுரை வரையப்படும் போதும் தமிழகத்திலேயே தங்கியிருந்தார் அவர் தமிழ் அமைச்சரும்கூட வெளிநாட்டிலிருந்து அங்கேயே பிறந்து வாழ்ந்த ஒரு சாதாரணத் தமிழர் தமிழகத்திற்கு வருகிறார் என்றாலே அவரைப் பார்ப்பதற்கு நமக்கு ஆர்வம் பாராட்டுவதிலே ஓர் ஆனந்தம் அவர் அந்த நாட்டின் ஆட்சியிலே ஒருஅமைச்சர் என்றால் அவை இருமடங்கு அல்லவா ஆகவேண்டும்!

காரணம் எங்கள் தமிழர்கள் எல்லோரும் பிழைக்கப் போனவர்கள் மட்டும் அல்லர். நாங்கள் நாடோடிக் கூட்டமல்ல நானிலம் முழுவதும் பரந்து வாழும் ஒரு உலகத்தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் தமிழமைச்சர்கள் இங்கு மட்டுமல்ல இதோ எங்குமிருக்கிறார்கள் என்பதற்கு இவர் ஓர் எடுத்துக்காட்டுஎன்றுகூறிஇறும்பூதெய்துவதற்கு அஃதோர் நல்லவாய்ப்பாகப் பயன்படும்,

ஆனால் செல்லையா இராசதுரைஎனும் அந்த அமைச்சரின் வருகை எங்களுக்கு அந்த ஆர்வத்தை ஊட்டவில்லை ஆனந்தத்தை ஏற்படுத்தவல்லை;

ஏனெனில் அவர்இலங்கையில் எங்கள் இனத்தின் மனத்தையெதிரொலிக்கும் கனவானாக ஆட்சியில்இடம் பெறவில்லை, உரிமைகளைக் கட்டிக்காக்கும் குணவானாக ஊராளச் செல்லவில்லை.

மாறாக காட்டிக்கொடுத்ததற்குக் கைமாறாக ஆட்சிக் கட்டிலில் இடம் பெற்றிருப்பவர். உரிமைகளைக் காவு கொடுத்ததற்கு ஊதியமாக அமைச்சர் பதவியில் ஒட்ட வைக்கப்பட்டவர்.

கட்டபொம்மன் அல்ல எட்டப்பர் சங்கிலியன் அல்ல காக்கை வன்னியன்-

தூங்கு மூஞ்சியாக இருந்தாலும் சுயமானத்தை அடகுவைக்காத கும்பகர்ணனை மதிக்கிற தமிழ் மரபு சூழ்ச்சிவல்லானாக இருந்தாலும் சோரம் போய்விட்ட வீடணனை மதிக்காது. அந்த மரபுக் கேற்பத்தான் சூசையை வரவேற்றோம். இராசதுரையை ஏறெடுத்தும்பார்க்கவில்லை.

இதற்காகஇராசதுரையை வரவேற்கத் தமிழகத்தில் ஆளே இல்லை என்று சத்தியமாக நாம் சொல்ல மாட்டோம், அந்த வீடணனையே ஆழ்வாராகக் கொண்டாடும் இந்த மண்ணில் நவீன வீடணர்களுக்கா நாதியற்றுப்போகும்!

ஆனால் அவர்கள் எல்லாம் இராசதுரை ஒரு தமிழ்மகன் என்பதற்காக வரவேற்றவர்களல்லர். விழா எடுத்துப்பாராட்டியவர்களல்லர். இன்று அவர் இலங்கையில் ஒரு அமைச்சராக இருக்கிறார் என்பதற்காக மட்டுமே பாராட்டியவர்கள். ஒருசிங்கள அமைச்சர் வந்தாலும் அவர்கள் இதனைச் செய்வார்கள், செயவர்த்தனாவந்தபோதும் செய்தார்கள்,

அதில்உள்ளம் இருக்காது வணிக உள்நோக்கம்தான் இருக்கும் இருந்தது.

இராசதுரை வந்திருப்பதும் உள்நோக்கத்தோடு தானே?

முதலில் தொண்டமானை அனுப்பி இலங்கையில் தமிழருக்குத்தொல்லையேஇல்லை என்று சொல்ல வைத்தார் செயவர்த்தனா, இப்போது இராசதுரையை அனுப்பியிருக்கிறார்.

இராசதுரையும் கம்புமூட்டையை விற்றதாகவும் ஆச்சு, தம்பிக்குப் பெண் கேட்டதாகவும் ஆச்சுஎன்ற பழமொழிக்கேற்ப புட்டபர்த்திசாயிபாபாவைச்சென்று தரிசித்தார். தன் மகளுக்கு மாப்பிள்ளை பார்த்துத் திருமணத்தையும் முடித்து வைத்தார். பிறகு தமிழர்களுடைய பிரச்சினைகளையெல்லாம் அடியோடு தீர்த்து வைத்து விட்டதைப் போல உலக இந்துசமய மாநாட்டையே இலங்கையில் நடத்தப்போகிறேன் என்று விளம்பர வேட்டையில் ஈடுபட்டார்.

இதற்காக ஒவ்வொரு மடாதிபதியையும் தானே நேரில் சென்று அழைக்கப் போவதாக சென்னையில் தம் பட்டமடித்துக் கொண்டார். எங்கே?... விஷ்வஹிந்து பரிஷத் என்ற ஒரு அமைப்பு அளித்தவிருந்தில்!

இந்த அமைப்பைச் சேர்ந்தசிலர்தான் தமிழ் நாட்டுக்கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யக்கூடாது என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தவர்கள்என்பதும் தகுதியைத் தேடிக் கொள்ளும் எவரும்அர்ச்சகராக வரலாம், பிறவித்தாழ்வுயர்வு அதற்கொரு தடையாகவோ தகுதியாகவோ இருக்கக்கூடாது. என்றுகலைஞர்போட்டசட்டத்தை வழக்கு மன்றத்தின் மூலம் செயல்படுத்த விடாமல் முடக்கியவர்களும் இவர்கள்தான் என்பதும் என்றென்றும் சமஸ்கிருதமே கோலோச்ச வேண்டும் என்று கொடி பிடித்துக் கொண்டிருப்பவர்களும் இவர்கள்தான் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. தமிழின் துரோகிகள் தமிழினத் துரோகியை வரவேற்றுப் பாராட்டியதில் ஒற்றுமை இருக்கத்தான் செய்கிறது,

தணிக்கை

தணிக்கை

---

# "இப்பொழுது இருக்கும் அரச அதிபரை உடனே நிறுத்துங்கள்!"

## பாராளுமன்றத்தில் பண்டிதர் இரத்தினம்

(24-10-79 புதன் இதழ்தொடர்)

இந்த அவசர காலச் சட்டத்தின் காரணமாக இப்பொழுது எங்கள் மக்கள் பொலிசு முதலிய படையினரால் அனுபவிக்கும் கஷ்டங்களை எடுத்துச்சொன்னோம். மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில், சிங்கள மக்களின பிரதிநிதிகளாகிய உங்களுக்கு இவற்றை நாம் இந்த இடத்தில் எடுத்துச் சொல்லாமல் வேறு எந்த இடத்தில் எடுத்துச் சொல்வது? எங்களை மரங்கள் என்றா, மண்ணாங்கட்டிகள் என்றா எண்ணுகிறீர்கள்? எங்களுக்கு உணர்ச்சி இருக்கின்றது. எங்களுக்கும் உள்ளம் இருக்கின்றது. எங்கள் மக்கள் அனுபவிக்கின்ற கஷ்டங்களை எடுத்துச் சொல்ல வேண்டியகடமைப் பாடும் இருக்கின்றது. அதற்காகத் தான் நாம் இங்கு வந்திருக்கிறோம்.

### நல்லவரை நியமியுங்கள்

எனவேதான் நாம்சொன்னோம், உண்மையிலேயே நீங்கள் இந்த நாட்டிலே ஐக்கியத்தை உண்டாக்க விரும்பினால், உண்மையிலேயே தமிழ் மக்களின் ஒத்துழைப்பைப் பெறவிரும்பினால் இந்த அவசரகாலம் சட்டம் என்றபோர்வையில் தமிழ் மக்களுக்கு—

திரு. ஆர். பிரேமதாசா: சிங்களவர் மட்டும் என்று ஏன் கூறுகிறீர்கள்? தமிழரும் எமக்கு வாக்களித்தனர்.

திரு.கா,பொ.இரத்தினம்: எமக்கு சிங்கள மக்களும் வாக்களித்துள்ளனர்;

ஆகவே, நாம் சொல்லும் கருத்துக்களை மக்கள் மத்தியிலே வெறுப்பையும் வேதனையையும் உண்டாக்காத முறையிலே ஆட்சியை நடத்த வேண்டும். முதலாவதாக. யாழ்ப்பாண மக்கள் மத்தியிலே நம்பிக்கையை உண்டாக்க வேண்டுமானால் ஒரு நல்ல அரசாங்க அதிபரை நியமியுங்கள், தேர்தலில்தோற்கடிக்கப்பட்ட ஒருவரை நியமித்து எங்களுக்கு அளவுக்கு மிஞ்சிய தொல்லைகளை நீங்கள் கொடுப்பதை இச்சபையில் சுட்டிக்காட்ட வேண்டியது எங்கள் கடமையாகும்- இந்த அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்ற அதேவேளையில்; உண்மையின் பேரால், நீதியின் பேரால். மக்களின் உரிமையின் பேரால் ஒரு நல்ல அரசாங்க அதிபரை யாழ் மாவட்டத்துக்கு நியமியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்,

இப்பொழுது இருக்கின்றவரை உடனே நிறுத்துங்கள் மாவட்ட அமைச்சருக்கும் எங்களுக்கும் இடையில் பிரச்சினை இல்லை; அவர் எங்களோடு ஒத்துழைக்கின்றார். அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர். அவர் நல்ல முறையில் இயங்குகிறார், அவருக்கு வலக்கையாக உதவி செய்யத் தக்க ஒருவரைநியமியுங்கள், மாவட்ட அமைச்சருடன் அவருடைய செயலாளர் செல்வதில்லை: மாவட்ட அமைச்சர் நெடுந்தீவுக்குச் சென்றார்; செயலாளர் செல்லவில்லை. மாவட்ட அமைச்சர் அங்குள்ள மக்களின் கஷ்டங்களை உணர்ந்து வந்தார். பத்திரிகையில் கொட்டை எழுத்துக்களில் ஒன்றும் போடப்படவில்லை. அவரை விட்டுவிட்டு பின் அரசாங்க அதிபர் சென்றார் ஒரு பக்கம் முழுவதும் செய்தி. மாவட்ட அமைச்சருக்குக் கிடைக்காத பிரசாரம் அந்த மாவட்ட அமைச்சருடைய செயலாளருக்குக் கிடைக்குமென்றால் யாரை அமைச்சரென்று நாங்கள் எண்ணுவது? யாழ்ப்பாண மக்கள், இவர் நாலாவது அரசாங்க அதிபரா, அல்லது மூன்றாவது மாவட்டஅமைச்சரா என்று கேட்கின்ற நிலையை உண்டாக்காமல் நல்ல, மக்கள் விரும்பத்தக்க, மக்களுக்குச் சேவை செய்யத்தக்க, மாவட்ட அமைச்சரோடு சேர்ந்து ஒத்துழைக்க ஒரு அரசாங்க அதிபரை நீங்கள் அனுப்ப வேண்டும் என்று கேட்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

தணிக்கை

—6-ம் பக்கம் பார்க்க

## திருமண வரவேற்பு

சாவகச்சேரி அறப்போராட்டக் குழுவைச் சேர்ந்த தோழர் ஜீவகதாஸ் அவர்கட்கும் செல்வி ஈஸ்வரி அவர்கட்கும் நடைபெற்ற திருமணத்தையொட்டி 1—11—79 மாலை 4.30 மணிக்கு மட்டுவில் வடக்கு சாவகச்சேரியில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்

## ஆய்வரங்கு

இம்மாதம் 27ம் 28ம் திகதிகளில் காலை 9மணி முதல் பி. ப. 4-45 வரை தமிழ் இளைஞர் பேரவையின யாழ்நகரிலுள்ள தமிழர்விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்தில் ஆய்வரங்கொன்று நடத்தவிருக்கிறார்கள். இவ்வரங்கில் ஆராயப்படுவதற்கென பல்வேறு தலைப்புக்கள் தரப்பட்டுள்ளன, விரும்புவோர் தலைப்புக்களை அடிப்படையாக வைத்துக்கருத்துக்களைவழங்கலாம்.

அடுத்தமாதம் 3ந் திகதியும் நடைபெறவிருக்கும் இவ்வாய்வரங்கில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் மற்றும் கூட்டணி எம், பிக்களும் கலந்துகொள்கிறார்கள்,

## இன்பத்தின் - - -

—1-ம் பக்கத் தொடர்

சட்டத்தரணி பாட்லட்: வன்செயல்களுக்கு காரணம் பொலீசாரே!

கமிஷனர்: பொலீசார், பொலீசார், பொலீசார்' என்ன பேச்சு இது?

பாட்லட்: ஐயா, வடக்கில் பொலீசாரும் இராணுவத்தினரும், இளைஞர்களைத் துன்புறுத்துகிறார்கள். அவர்களைக் கைது செய்கிறார்கள், அவை நிறுத்தப்பட வேண்டும்.

கமிஷனர்: அவ்வாறு துன்புறுத்தப்பட்ட இளைஞர்கள் இருந்தால் உடனே அவர்களை இங்கு அழைத்து விசாரிப்போம்.

பாட்லட்: கடந்த ஜூலை 13ம் தேதி வடபகுதியைச் சேர்ந்த இளைஞர் இன்பம் என்பவர் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது மரணத்துக்கு பொறுப்பானவர்கள் யார்?

கமிஷனர்: அவ்வாறானவை பற்றி எனக்கு இதுவரை தெரியாது.

# "உங்களின் மூளைக்கு யாரோ விஷமேற்றியுள்ளனர்!"

--பாட்லட்

# "கமிஷன் முன் இவ்வாறு பேசவேண்டாம்"

--சன்சோனி

கமிஷனர்,— சிவகுமாரனது மரணச்சடங்கில் கலந்துகொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அவர் ஒரு வீரன் எனப்பேசினர்.

சட்டத்தரணி லெஸ்லி பாட்லட்:— அப்படியென்றால் புரன் அப்பு!

கமிஷனர்:— புரன் அப்புவைப்பற்றி என்னிடம் சொல்லத் தேவையில்லை,

லெஸ்லிபாட்லட்:—புரன் அப்பு அந்நியரின் ஆட்சியை எதிர்க்கும் இயக்க மொன்றினை ஆரம்பித்து......''

கமிஷனர்:— இல்லை, இல்லை, புரன் அப்பு பற்றி இங்கு பேசத் தேவையில்லை.

பாட்லட்;— ஐயா, உங்களின் மூளைக்கு யாரோ விஷம் ஏற்றியுள்ளனர்;

கமிஷனர்.— மிஸ்டர் பாட்லட், இந்தக் கமிஷன் முன்னிலையில் இவ்வாறுபேசுவதற்கு முயலவேண்டாம்.

பி. தென்னக்கோன்—: பாட்லட் கமிஷனைஅவமதிக்கிறார்.

பாட்லட்:— தமிழர்விடுதலைக் கூட்டணியினர் அவ்வாறான கூட்டங்களில் பேசினார்கள் என்றால்அவர்களைக் கைது செய்திருக்கலாம் அல்லவா? ஏன் அவ்வாறு இத்தலைவர்களை கைதுசெய்யவில்லை! எனது கேள்வி இது தான்.

—சன்சோனி ஆணைக்குழு முன் (தினபதி 24.10,79)

## தகுதிவாய்ந்த - - -

—1-ம் பக்கத் தொடர்

பெயரோடு தொடர்பான செய்திகளையும் தணிக்கை செய்யாமல் அச்செய்திகளுக்கு மாறாகவும் மறுமொழியாகவும் வெளியிடப்படும் செய்திகளைத் தணிக்கை செய்கிறாராகையாலும் பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்பட்ட பேச்சுக்களைத் தணிக்கை செய்து பாராளுமன்ற உறுப்பினரின் தனிஉரிமையைச்சிதைக்கிறாராகையாலும் இந்நாட்டின் எந்த அரசாங்கமும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்ற எவரையும் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்காத மரபைத்தழுவிதிரு. யோகேந்திரா துரைசுவாமியைத் தகுதிவாய்ந்த அதிகாரி பதவியிலிருந்து நீக்கி அவரின் இடத்துக்கு அரசியலில் ஈடுபட்டுப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாத ஒருவரை உடனே நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

## இராணுவம் திடீர் சோதனை

கல்குடாத் தொகுதியின் பல பாகங்களிலும் கடந்த ஒருவாரமாக இராணுவத்தினர் திடீர் சோதனைகள் நடத்தி வருகின்றனர்.

## "போராட்டம்

—1-ம் பக்கத் தொடர்

மக்கள் தமது சுதந்திரத்துக்காக ஆயுதமெடுத்துப் போராடுவதை இலங்கையுட்பட உலக நாடுகள் பலவும் அங்கீகரித்துள்ளன; ஸ்பெயினில் பாஸ்க்தேசிய இனம் தனது சுதந்திரத்துக்காக ஆயுதமெடுத்துப் போராடிவருகிறது. தென்னாபிரிக்காவிலும் அங்குள்ள மக்கள் தமது விடுதலைக்காக கெரில்லா போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஐ.நா. சபை இறைமை மறுக்கப்படும்இனங்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்கஏதாவது ஓர் அமைப்பை ஏற்படுத்திஇருக்கமான நடவடிக்கையெடுத்தாலன்றி ஒடுக்கப்படும் ஒவ்வொரு தேசிய இனமும் தனது சக்தி வசதி வாய்ப்பு உதவிஆகியவைகளுக்கேற்ப போராடியே விடுதலையைப் பெற வேண்டிய நிலையில் இன்று விடப்பட்டுள்ளது.

மார்ட்டின் லூதர்கிங் கூறியதுபோல உலகிலே யுத்தமில்லாத நிலைமைக்குப்பெயர் அமைதியல்ல— நீதி நிலைபெற்றாலே அங்கு உண்மையான சமாதானம் நிலவ முடியும். உரிமை மறுக்கப்படுகிற போதெல்லாம் போராட்டம் வெடித்துக்கிளம்புவது தவிர்க்கமுடியாதது.

இலங்கையில் தமிழீழத் தேசிய இனத்தின் விடுதலைக்காக போராடும் இயக்கம் காந்திய வழியையே நாடியுள்ளது: எந்தவழியில் என்றாலும் போராட்டம்மூலமே விடுதலையை வென்றெடுக்க முடியும் என்பது இன்றைய உலகின் நியதியாகிவிட்டது.

இலங்கை இரண்டுதேசிய இனங்களின் தாயகம் என்பதை மறந்து நமது பழைய தலைவர்கள் இலங்கை ஒரே நாடென்றும் இலங்கையர் என்று ஒரு தேசிய இனம் இருப்பதாகவும் ஒரு மாயையில் அகப்பட்டிருந்தனர். இதனால்தான் சிங்கள மக்கள் பெரும்பான்மைஎன்றும் தமிழர் சிறுபான்மைஎன்றும் இலங்கைத்தமிழர்பிரச்சினை சிறுபான்மைப் பிரச்சினையென்றும் ஒரு கருத்துவளர்கப்பட்டுவிட்டது.

உண்மையில் இங்கு நிலவுவது சிறுபான்மை பெரும்பான்மைப் பிரச்சினைஅல்ல; இரண்டு தேசியஇனங்களுக்கிடையேயுள்ள பிரச்சினையேஇது. தமிழ் மக்களின் விடுதலைக் கோரிக்கையை வகுப்புவாதம் என்று ஆரம்பத்தில் வர்ணித்த மார்க்சீய வாதிகள் இப்போது தமிழ் மக்கள்ஒடுக்கப்பட்ட ஒரு தேசியஇனமென்பதையும் ஒடுக்கப்பட்ட தேசிய இனம் என்ற முறையில் தமது அரசியல் சுதந்திரத்துக்காகப் போராட தமிழ் மக்களுக்கு உரிமை உண்டென்பதையும் அங்கீகரிக்கிறார்கள்''

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

எம்.ஜி.ஆர், சாவித்திரி, வீரப்பா சந்திரபாபு

நடித்த

மகாதேவி

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

4-வது வாரம்

சிவாஜி, சுஜாதா, விஜயகுமார், சுந்தரராஜன், நாகேஷ், மனோரமா, சத்தியப்பிரியா, சங்கீதா

-- நடித்த --

தீபம்

ஈஸ்மன் கலர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.